**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.MCOP.61/2019**

**Deposition of P.W.1 -** சசி

**Dated: 15.12.2023**

**3 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

அழகியமண்டபத்திலிருந்து – திருவட்டார் செல்லும் சாலையில் மனு விபத்து நடந்தது. TN 75 F 6766 என்ற இருசக்கர வாகனத்தின் பின்னால் நான் சென்றுக்கொண்டிருந்தேன். நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று எனக்கு முன்னால் சென்றுக்கொண்டிருந்த TN 75 F 6766 என்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி அதன் பிறகு காரின் மீது மோதினேன் என்றால் சரியல்ல. கார் ஓட்டுனர் காரை மெதுவாகவும், கவனமாகவும் ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. நான் தான் மனு விபத்திற்கு முழு காரணம் என்று சொன்னால் சரியல்ல. மனு விபத்திற்கு கார் ஒட்டுனர் காரணம் கிடையாது என்றால் சரியல்ல. மனு விபத்தின் போது நான் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை. எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் முழுமையாக குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. எனக்கு தலையிலும் காயம் ஏற்பட்டுள்ளது. நான் தலைக்கவசம் அணிந்திருந்தால் தலையில் காயம் ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. நான் 25 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். நான் ரூ.62,00,000/–ற்கும் அதிகமாக மருத்துவ செலவு செய்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. நான் 25 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ பில்களின் தொகை ரூ.7,98,425/– மட்டுமே என்று சொன்னால் சரியல்ல. கிம்ஸ் மருத்துவமனையில் 2 நாட்களுக்கு ஒரு முறை மருத்துவ பில்கள் வழங்கப்படும். பின்னர் டிஸ்சார்ஜ் ஆகும் போது

ஓட்டுமொத்த செலவீனத்திற்கும் சேர்த்து மருத்துவ பில் வழங்கப்படும். இரண்டு நாட்களுக்கு ஒரு முறை மருத்துவமயைலிருந்து தரப்படம் புரோவிசினல் பில்லை கணக்கில் எடுத்து கொள்ள இயலாது என்றும் டிஸ் சார்ஜ் பில்லை தான் கணக்கில் எடுத்துக்கொள்ள இயலும் என்றும் சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.10, 11. 14. 15 ஆகியவை அதிக இழப்பீடு பெறுவதற்காக மிகைப்படுத்தி தயார் செய்யப்பட்டவை என்றும் அதில் கண்டுள்ளவாறு எனக்கு செலவுகள் ஏற்படவில்லை என்றும், சொன்னால் சரியல்ல. நான் இம்மனுவில் தாக்கல் செய்துள்ள அட்வான்ஸ் ரசீதுகளை மருத்துவ செலவீனமாக எடுத்துக் கொள்ள இயலாது என்றால் சரியல்ல. நான் மனுவிலும் எனது முதல் விசாரணை சாட்சியத்திலும் கூறியுள்ளவாறு மருத்துவ செலவுகளும், இழப்புகளும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் கூறுவது போன்று எனக்கு வலது காலில் 3 இஞ்ச் அளவிற்கு உயரம் குறைந்து விட்டது என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. எனது வலது கணுக்கால் பகுதியை அசைக்கமுடியாது என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. எனக்கு நிரந்தர ஊனம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. ம.சா.அ.9 அதிக இழப்பீடு பெறுவதற்காக ஊனத்தின் அளவை மிகைப்படுத்தி பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கூலி வேலை செய்து மாதம் ரூ.40,000/- வருமானம் ஈட்டி வந்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. நான் கூறுவது போன்று வருவாய் இழப்போ, வருவாய் ஈட்டுத்திறன் இழப்போ எனக்கு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள இழப்பீடு தொகை, வட்டி விகிதம் அதிகமானது என்றால் சரியல்ல. மனு விபத்தில் 3 வாகனங்கள் சம்மந்தப்பட்டுள்ளது. அதில் ஒரு கார், மற்றும் 2 மோட்டார் சைக்கிள் ஆகும். அதில் இரண்டு மோட்டார் சைக்கிளின் உரிமையாளர்கள் மற்றும் காப்பீடு

நிறுவனங்கள் இம்மனுவில் சேர்க்கப்படவில்லை. காரின் உரிமையாளர் மனு விபத்தின் போது 2 வது எதிர்மனுதாரர் கிடையாது என்றால் சரியல்ல. 08.06.2016 முதல் தான் 2 வது எதிர்மனுதாரர் காரின் உரிமையாளர் என்றால் சரியல்ல. காட்வின் ஷைனி என்பவர் தான் மனு விபத்தின் போது காரின் உரிமையாளர் என்றால் சரியல்ல. 2 வது எதிர்மனுதாரருக்கும், 3 வது எதிர்மனுதாரருக்கும் இடையில் காப்பீடு ஒப்பந்தம் எதுவும் நிலுவையில்இருந்ததில்லை என்றால் சரியல்ல. 2 வது எதிர்மனுதாரரிடம் 1 வது எதிர்மனுதாரர் வேலை பார்த்ததில்லை என்றால் சரியல்ல. மனு விபத்தின் போது 1 வது எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுனர் உரிமம் கிடையாது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அவசியமான தரப்பினர்ளை இம்மனுவில் சேர்க்காததால் இம்மனு தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்றால் சரியல்ல. 3 வது எதிர்மனுதாரர் எனக்கு எவ்வித இழப்பீடும் வழங்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. மனு விபத்து என்னுடைய கவனக்குறைவால் நடைெபற்றது என்றும் எனவே மனு தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்றும் சொன்னால் சரியல்ல.